தினமணி

பசுமைக் குடில்களுக்கு சாதாரண மின் கட்டணம்: கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் உத்தரவு

First Published : 31 Aug 2012 02:12:56 PM IST

கிருஷ்ணகிரி, ஆக. 30: தோட்டக்கலை விவசாயிகளின் பசுமைக் குடில்களுக்கு சாதாரண மின் கட்டணம் வசூலிக்க கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் உத்தரவிட்டார். மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் இந்த உத்ததரவை ஆட்சியர் பிறப்பித்தார்.

இதற்கு முன்பு பசுமைக் குடில்களுக்கு வழங்கப்படும் மின்சாரத்துக்கு வணிக ரீதியான மின் கட்டணம் வசூலிக்கப்பட்டது. விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று புதிய உத்தரவைப் பிறப்பித்த ஆட்சியருக்கு விவசாயிகள் நன்றி தெரிவித்தனர்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் மூலம் சிறு மற்றும் குறு விவசாயிகள், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி விவசாயிகள் தங்கள் நில அபிவிருத்திப் பணிகளுக்குப் பணியாளர்களைப் பயன்படுத்த உத்தரவிட்ட தமிழக முதல்வருக்கு கூட்டத்தில் நன்றி தெரிவிக்கப்பட்டது.

இந்த விவசாயிகள் குறைத்தீர் கூட்டத்தில் ஒசூரைச் சேர்ந்த சுப்பிரமணிரெட்டி தெலுங்கு மொழியில் கேள்வி கேட்டார். இதற்கு ஆட்சியர் தெலுங்கு மொழியிலேயே பதில் அளித்ததற்கு விவசாயிகள் பாராட்டுத் தெரிவித்தனர்.

இந்தக் கூட்டத்தில் வேளாண், தோட்டக்கலை, பொதுப்பணி, வருவாய், கனிம வளம், போக்குவரத்து, மின் துறை தொடர்பாக பல்வேறு பிரச்சினைகள் விவாதிக்கப்பட்டன.

மாவட்ட வருவாய் அலுவலர் பிரகாசம், வேளாண் இணை இயக்குநர் பெரியசாமி உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

250-க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர்.

சம்பா சாகுபடிக்கு தண்ணீர் வேண்டும் : தமிழக அரசு பதில் மனு

First Published : 31 Aug 2012 03:51:17 PM IST

புது தில்லி, ஆக., 31 : தமிழகத்தில் மேட்டூர் பாசன விவசாயிகள் சம்பா சாகுபடியை மேற்கொள்ள காவிரியில் இருந்து கர்நாடக அரசு தண்ணீர் திறந்து விட வேண்டியது அவசியம். அவ்வாறு திறந்துவிடப்படவில்லை என்றால், தமிழகத்தின் வேளாண்மை கடுமையாக பாதிக்கப்படும்.

இதனால் உணவு உற்பத்தி பாதிக்கும் என்று தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த பதில் மனுவில் கூறியுள்ளது.

காவிரியில் கர்நாடகத்தை உடனடியாக தண்ணீர் திறந்துவிட உத்தரவிடக் கோரி தமிழக அரசு தாக்கல் செய்த மனுவுக்கு, கர்நாடக அணைகளில் போதிய நீர் இன்மையால் வரும் டிசம்பர் மாதம் வரை காவிரியில் தண்ணீரை திறந்து விட இயலாது என்று கர்நாடக அரசு தாக்கல் செய்த மனுவுக்கு தமிழக அரசு இன்று பதில் மனு தாக்கல் செய்துள்ளது.

விவசாயிகள் கவனத்துக்கு...

First Published : 01 Sep 2012 10:25:25 AM IST

சிதம்பரம், ஆக. 31: தோட்டக்கலைத் துறையில் தமிழக அரசு அறிவித்துள்ள பல்வேறு மானியம் மற்றும் அதை பெறும் வழிமுறைகள் குறித்து விவசாயிகள் தங்களது சந்தேகங்களை அறிந்துகொள்ளும் வகையில் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் தொலைபேசி வழி நிகழ்ச்சியை வருகிற 4-ம் தேதி வரை நடத்துகிறது.

இந்நிகழ்ச்சியில் விவசாயிகளின் சந்தேகங்களுக்கு தோட்டக்கலைத்துறை நிபுணர்கள் பதில் அளிக்க உள்ளனர்.

97912 78174 என்ற எண்ணில் விவசாயிகள் அன்றைய தினம் தொடர்பு கொண்டு தங்களின் சந்தேகங்களை மற்றும் கேள்விகளை செப். 1-ம் தேதி முதல் 3-ம் தேதி வரை பதிவு செய்து கொள்ளலாம்.

செப். 4-ம் தேதி துறை சார்ந்த நிபுணர்கள் அக்கேள்விகளுக்கு உரிய பதில்களை தொலைபேசி மூலம் தெரிவிப்பர்.

எனவே விவசாயிகள் தொலைபேசி உரையாடல் நிகழ்ச்சியில் கேள்விகளை பதிவு செய்து பயன்பெறுமாறு எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவன திட்ட அலுவலர் இளங்கோவன் தெரிவித்துள்ளார்.

First Published : 01 Sep 2012 11:06:36 AM IST

ஈரோடு, ஆக. 31: பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வெள்ளிக்கிழமை நிலவரப்படி 35.50 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 2,369 கன அடி நீர் வந்தது. ஆற்றிலும், வாய்க்காலிலும் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 1.79 டி.எம்.சி.

தனியார் கிடங்குகளில் இருப்பு வைக்கப்பட்டுள்ள ரூ.22,500 கோடி மஞ்சளுக்கு ரசீது வழங்க வேண்டும்

First Published : 01 Sep 2012 11:07:35 AM IST

ஈரோடு, ஆக. 31: ஈரோட்டில் தனியார் கிடங்குகளில் இருப்பு வைக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்குச் சொந்தமான ரூ.22,500 கோடி மதிப்பிலான மஞ்சளுக்கு உடனடியாக ரசீது வழங்க வேண்டும் என்று இந்திய மஞ்சள் விவசாயிகள் சங்கத் தலைவர் பி.கே.தெய்வசிகாமணி வலியுறுத்தியுள்ளார்.

ஈரோட்டில் வெள்ளிக்கிழமை அவர் செய்தியாளர்களிடம் கூறியது:

தமிழகத்தில் ஈரோடு, கோபி, தருமபுரி மாவட்டம் அரூர், சேலம் மாவட்டம் ஆத்தூர், நாமக்கல் மாவட்டம் நாமகிரிபேட்டை உள்ளிட்ட இடங்களில் மஞ்சள் சந்தைகள் இயங்கி வருகின்றன.

இந்திய மஞ்சள் விவசாயிகள் சங்கம் அறிவித்துள்ள மஞ்சளுக்கு குவிண்டாலுக்கு ரூ.9,000 விலை நிர்ணயம் என்ற அறிவிப்பை ஈரோடு தவிர பிற சந்தைகளில் உள்ள வியாபாரிகள் வரவேற்கின்றனர். ஈரோடு சந்தையில் இருக்கும் வியாபாரிகளும், விவசாயிகளின் விலை அறிவிப்புக்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.

சங்கம் அறிவித்துள்ள ரூ.9,000 விலைக்கு குறைவாக எந்த விவசாயியும் விற்பனை செய்ய வேண்டாம் என தொடர்ந்து பிரசாரம் செய்து வருகிறோம். அவசரத் தேவைக்காக எந்த விவசாயியாவது மஞ்சளை விற்பனை செய்ய வந்தால், பொருளீட்டுக் கடன் பெற மஞ்சள் விவசாயிகள் சங்கம் ஏற்பாடு செய்யும். விவசாயிகள் பொருளீட்டுக் கடனை பெறுவதற்காக பெருந்துறை சிப்காட் எதிரே 25,000 மூட்டை இருப்பு வைக்கக் கூடிய அளவுக்கு மத்திய அரசின் அங்கீகாரம் பெற்ற கிடங்கு உள்ளது. இதை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். நாமகிரிபேட்டை சந்தையில் 20,000 மூட்டை மஞ்சளை இருப்பு வைக்கக் கூடிய வசதி உள்ளது. ஆனால், இதுபோன்ற வசதி ஈரோடு சந்தையில் இல்லை.

1981-ம் ஆண்டில் முட்டைக்கு விலை நிர்ணயம் செய்வதற்காக நாமக்கல்லில் அமைக்கப்பட்ட தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு, 3 ஆண்டுகால போராட்டத்துக்குப் பின்னர்தான் விலை நிர்ணயம் செய்ய முடிந்தது.

ஆனால், மஞ்சளுக்கு நாடு முழுவதும் 3 மாதங்களுக்குள் விலை நிர்ணயம் செய்துவிடுவோம். தமிழகத்தில் இன்னும் 15 முதல் 30 நாள்களுக்குள் விலை நிர்ணயம் செய்வது உறுதி.

ஈரோட்டில் உள்ள தனியார் கிடங்குகளில் ரூ.22,500 கோடி மதிப்பிலான 25 லட்சம் மூட்டை மஞ்சள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இவை அனைத்தும் விவசாயிகளுக்குச் சொந்தமானவை. ஆனால், இவற்றுக்கு கிடங்கு உரிமையாளர்கள் இதுவரை ரசீது வழங்கவில்லை. இந்த மூட்டைகளுக்கு ரசீது வழங்க மாவட்ட நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது.

எனவே, விவசாயிகள் தாங்களாகவே முன்வந்து மஞ்சள் மூட்டைகளுக்கான ரசீதுகளை பெற்றுக் கொள்ள வேண்டும் என்றார்.

## சிறு விவசாயிகளுக்கு தனி இயக்குநரகம்: தேயிலை வாரிய செயல் இயக்குநர் தகவல்

First Published : 01 Sep 2012 11:07:56 AM IST

கூடலூர், ஆக. 31: சிறு தேயிலை விவசாயிகளுக்கு தனி இயக்குநரகம் அமைக்கப்படவுள்ளதாக, தென்னிந்திய தேயிலை வாரிய செயல் இயக்குநர் ஆர்.அம்பலவாணன் தெரிவித்தார்.

கூடலூரில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற தேயிலை விவசாயிகளுக்கான கருத்தரங்கை துவக்கி வைத்து அவர் பேசியது:

தேயிலைத் தொழிலின் எதிர்காலம் சிறு விவசாயிகள் கையில்தான் உள்ளது. அதனால், நல்ல தொழில்நுட்பங்களை தெரிந்துகொள்ள வேண்டும். பெரிய நிறுவனங்களின் ஆதிக்கம் படிப்படியாக குறையும் சூழல் ஏற்பட உள்ளது. தேயிலை வாரியத்தை விவசாயிகள் தேடி வந்த காலம் போய், நாங்கள் சிறு விவசாயிகளை தேடி வருகிறோம்.

இதன் ஒருபகுதியாக நீலகிரியில் உள்ள சிறு விவசாயிகளின் பட்டியலைத் தயாரித்து வருகிறோம். இதில் 80 சதவீத பணிகள் நிறைவு பெற்றுள்ளது. கடந்த ஆண்டு மட்டும் பல்வேறு பணிகளுக்காக சிறு விவசாயிகளுக்கு, குன்னூர் அலுவலகம் மூலமாக ரூ.25 கோடி வழங்கப்பட்டுள்ளது.

தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவி ரூ.1.5 கோடி வழங்கப்பட்டுள்ளது. சிறு விவசாயிகளின் குழந்தைகளுக்கு கல்வி உதவி வழங்க உள்ளோம். அதில் பயனாளிகளைக் கண்டறிய சிரமம் ஏற்பட்டுள்ளது.

கூடலூர் பகுதியில் செக்ஷன்-17 நிலப் பிரச்னை இருப்பதால், தோட்டத்தில் தேயிலை விவசாயம் செய்திருந்தால் அவர்களுக்கு உதவி வழங்கலாம் என்று தேயிலை வாரியத் தலைவர் தெரிவித்துள்ளார்.

தேயிலை வாரியத்தின் நோக்கமே சிறு விவசாயிகளை மேம்படுத்துவதுதான். தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் சிறு விவசாயிகளுக்கு பச்சைத் தேயிலை உலர வைக்கும் அறை மற்றும் வாகனம், இயந்திரங்கள் வழங்கி வருகிறோம். வேலையில்லா இளைஞர்களுக்கு 50 சதவீத மானியத்தில் இயந்திரங்கள் வழங்க உள்ளோம். எதிர்காலத்தில் இத்தொழிலுக்கு தொழிலாளர்கள் பற்றாக்குறை ஏற்படவுள்ளது.

நீலகிரியில் தரமான தேயிலை உற்பத்தி செய்தும், சில காரணங்களால் நல்ல விலை கிடைப்பதில்லை. கலப்படத் தொழிலை சிலர் செய்வதால் பலர் பாதிக்கப்படுகின்றனர். வட இந்திய தேயிலைக்கு இணையான விலையைப் பெறுவதுதான் இப்போதைய நோக்கம் என்றார்.

முட்டை விலை

First Published : 01 Sep 2012 11:16:21 AM IST

நாமக்கல், ஆக. 31 : நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு வெள்ளிக்கிழமை, அறிவித்த முட்டையின் பண்ணைக் கொள்முதல் விலை முட்டை ஒன்றுக்கு நாமக்கல்லில் ரூ.3.40, சென்னையில்
ரூ. 3.45.

கறிக்கோழி விலை

பல்லடம் பிராய்லர்ஸ் ஒருங்கிணைப்புக் குழு வெள்ளிக்கிழமைஅறிவித்த கறிக்கோழியின் பண்ணைக் கொள்
முதல் விலை கிலோ ரூ.69, முட்டைக் கோழி கிலோ
ரூ.40.

நாமக்கல் மாவட்டத்தில் உரக்கண்காணிப்பு பிரிவு அமைப்பு

First Published : 01 Sep 2012 11:09:24 AM IST

நாமக்கல், ஆக.31: உரத்தேவை, உரம் வரவு, விற்பனை மற்றும் இருப்பு விவரங்களை கண்காணிக்கும் வகையில் நாமக்கல் மாவட்டத்தில் வட்டார அளவில் உரக்கண்காணிப்பு பிரிவு அமைக்கப்பட்டுள்ளது.

விவசாயிகள் உரம் சார்ந்த விவரங்களை அரிய தங்கள் வட்டார அலுவலகத்திலுள்ள உரகண்காணிப்பு பிரிவை தொடர்பு கொள்ள தொலைபேசி எண்களும் வெளியிடப்பட்டுள்ளன.

அதன்படி, நாமக்கல் வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகம் 04286 280465, வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகங்கள் 04286 233698 (நாமக்கல்), 04286 270027 (சேந்தமங்கலம்), 04286 252225 (எருமப்பட்டி), 04286 255555 (மோகனூர்), 04286 243333 (புதுச்சத்திரம்), 04286 247585 (கொல்லிமலை), 04268 251220 (பரமத்தி) 04268 254244 (கபிலர்மலை), 04288 252609 (திருச்செங்கோடு), 04288 242996 (பள்ளிப்பாளையம்), 04288 238800 (மல்லசமுத்திரம்), 04288 231242 (எலச்சிப்பாளையம்), 04287 240526 (நாமகிரிப்பேட்டை), 04287 264109 (வெண்ணந்தூர்) ஆகிய எண்களில் தொடர்பு கொள்ள வேண்டும்.

மேலும் விவரங்களுக்கு வேளாண்மை அலுவலரை (தரக்கட்டுப்பாடு) 9965557050 எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என வேளாண்மை இயக்குநர் ஆ.பிரபாகரன் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நீலகிரியில் தொடரும் மழை : விவசாயிகள் மகிழ்ச்சி

First Published : 01 Sep 2012 01:13:04 PM IST

உதகை, செப் 1: நீலகிரி மாவட்டத்தில் வெள்ளிக்கிழமையும் பரவலாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. அணைகளின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்த மழையால் நீர்மட்டம் அதிகரித்து வருகிறது. சனிக்கிழமை காலை வரை மாவட்டத்தில் 425 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. இதில் அதிகபட்சமாக அப்பர்பவானி பகுதியில் 103 மி.மீ.மழை பதிவாகியுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் கடந்த 4 நாட்களாக பரவலாக அனைத்து இடங்களிலும் நல்ல மழை பெய்து வருகிறது. பலத்த மழையுடன் சூறாவளி காற்றும் வீசி வருவதால் மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகள் கடும் குளிரின் பிடியில் சிக்கியுள்ளது.

மேலும் தேயிலை மற்றும் மலைக்காய்கறி பயிர்களுக்கு இந்த மழை ஏற்றதாக அமைந்துள்ளதால் விவசாயிகளும் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## நீலகிரி தேசிய தோட்டக்கலை இயக்கத்தை செயல்படுத்த ரூ.133 லட்சம் ஒதுக்கீடு

First Published : 01 Sep 2012 01:10:56 PM IST

உதகை, செப் 1: நீலகிரி மாவட்டத்தில் தேசிய தோட்டக்கலை இயக்கத்தை செயல்படுத்த நடப்பாண்டிற்கு ரூ.133 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக, மாவட்ட தோட்டக்கலை இணை இயக்குநர் க.மோகன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது: நீலகிரி மாவட்டத்தில் இவ்வாண்டில் உதகை, குன்னூர், கோத்தகிரி மற்றும் கூடலூர் வட்டாரங்களில் தேசிய தோட்டக்கலை இயக்கம் ரூ.133 லட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படவுள்ளது.

இவ்வாண்டில் தோட்டக்கலை பயிர்கள் சாகுபடியை ஊக்குவிக்க விவசாயிகளுக்கான பல்வேறு திட்டங்கள் தேசிய தோட்டக்கலை இயக்கத்தில் நிறைவேற்றப்பட உள்ளன. எனவே, இத்திட்டங்களைக் குறித்து தெரிந்து கொள்ள அந்தந்த பகுதிகளிலுள்ள விவசாயிகள் வேளாண்மை உதவி அலுவலர்கள் அல்லது தோட்டக்கலை அலுவலரை அணுகி விபரங்களை பெற்றுக்கொள்லலாம். அத்துடன் மாவட்டத்தில் அமைந்துள்ள வேளாண் விரிவாக்க மையங்களிலும், தோட்டக்கலை உதவி இயக்குநர்களை அணுகியும் விபரங்களை பெற்றுக்கொள்லலாம் எனவும் இணை இயக்குநர் மோகன் தெரிவித்துள்ளார்.

தினமலர்
உண்மையின் உரைகல்

ஆகஸ்ட் 31,2012,23:44

**பருத்தி உற்பத்தி 7 சதவீதம் குறையும்**




புதுடில்லி: வரும் 2012-13ம் சந்தை பருவத்தில் (அக்.,-செப்.,), நாட்டின் பருத்தி உற்பத்தி, 7 சதவீதம் குறையும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.சர்வதேச பருத்தி உற்பத்தியில், சீனா முதலிடத்திலும், இந்தியா, இரண்டாவது இடத்திலும் உள்ளன. நாட்டின் மொத்த பருத்தி உற்பத்தியில், குஜராத் மற்றும் மகாராஷ்டிரா மாநிலங்களின் பங்களிப்பு, குறிப்பிடத்தக்க அளவில் உள்ளது. நாட்டின் மொத்த பருத்தி உற்பத்தியில், குஜராத்தின் பங்களிப்பு மட்டும், 33 சதவீதம் என்ற அளவில் உள்ளது.நடப்பு 2011-12ம் பருத்தி பருவத்தில், பருத்தி பயிரிடும் பரப்பளவு, 1.15 கோடி ஹெக்டேர் என்ற அளவில் உள்ளது. இதையடுத்து, பருத்தி உற்பத்தி, 3.47 கோடி பொதிகளாக (1 பொதி-170 கிலோ) இருக்கும் என, மத்திய பருத்தி ஆலோசனை வாரியம் மதிப்பிட்டுள்ளது.தற்போது, பருத்தி உற்பத்தியில் முன்னணியில் உள்ள, குஜராத் மாநிலத்தின் சவுராஷ்டிரா மற்றும் கட்ஜ் பகுதிகளில், வழக்கத்தை விட குறைவாகவே மழை பெய்துள்ளது. மகாராஷ்டிரா மாநிலத்திலும், போதிய மழை இல்லாததால், வறட்சியே நிலவுகிறது. இதனால், வரும் பருத்தி பருவத்தில், இதன் உற்பத்தி, 7 சதவீதம் குறையும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.

ஆகஸ்ட் 31,2012,23:45

**ரசாயன உரத்திற்கான தேவை அதிகரிக்கும்**



புதுடில்லி: நடப்பு 2012-13ம் நிதியாண்டில், டை அம்மோனியம் பாஸ்பேட் (டீ.ஏ.பி), மியூரேட் ஆப் பொட்டாஷ் (எம்.ஓ.பி) உள்ளிட்ட ரசாயன உர வகைகளுக்கான தேவை அதிகரிக்கும் என, மத்திய உரத் துறை இணையமைச்சர் ஸ்ரீகாந்த் குமார் ஜெனா, பார்லிமென்டில் தெரிவித்தார்.இதன்படி, நடப்பு நிதியாண்டில், டீ.ஏ.பி., மற்றும் எம்.ஓ.பி., ஆகியவற்றிற்கான தேவை, முறையே 1.33 கோடி டன் மற்றும் 51 லட்சம் டன்னாக இருக்கும். மேலும், இதன் இறக்குமதி முறையே, 91 லட்சம் டன் மற்றும் 50 லட்சம் டன்னாக இருக்கும் என, தெரிவிக்கப்பட்டுள்ளது.மேலும், மதிப்பீட்டு நிதியாண்டில், யூரியா உரத்திற்கான தேவை, 3.20 கோடி டன்னாகவும், இதன் இறக்குமதி, 90 லட்சம் டன்னாகவும் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.எம்.ஓ.பி., உரத்திற்கான தேவை முழுவதையும், நம் நாடு, இறக்குமதி வாயிலாகவே பூர்த்தி செய்து கொள்கிறது. மேலும், நாட்டின் டீ.ஏ.பி., மற்றும் யூரியா ஆகிய உரங்களுக்கான மொத்த தேவையில், முறையே 90 சதவீதம் மற்றும் 20 சதவீதம், இறக்குமதி வாயிலாக ஈடுசெய்யப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.நடப்பு நிதியாண்டின், முதல் நான்கு மாதங்களில், நம்நாட்டில், 14.20 லட்சம் டன் யூரியாவையும், 14.30 லட்சம் டன் டீ.ஏ.பி.,யையும், 8.28 லட்சம் டன் எம்.ஓ.பி உரத்தையும் இறக்குமதி செய்து கொண்டுள்ளது.

தினகரன்

## தோட்டகலை பயிர் சாகுபடியை அதிகரிக்க புதிய மானிய திட்டம்

பதிவு செய்த நேரம்:2012-08-31 11:37:10

திருப்பூர், : மாவட்டத்தில் காய்கறிகள், பழங்கள் உற்பத்தியை அதிகரித்து, விவசாயிகளின் வருவாயை பெருக்க உயர் தொழில்நுட்ப உற்பத்தி பெருக்குத் திட்டம் அமல்படுத்தப்பட்டு உள்ளது.

இத்திட்டத்தை செயல்படுத்த ஆர்வம் உள்ள விவசாயிகளுக்கு, தோட்டக்கலை துறை மூலம் மானியம் வழங்கப்படும். திருப்பூர் மாவட்டத்தில், பழங்கள், காய்கறி, நறுமண பொருட்கள் என, தோட்டக்கலை பயிர்கள் மட்டும், 19,000 ஹெக்டேரில் பயிரிடப்படுகின்றன. கத்தரி, வெண்டை, கீரை போன்ற காய்களும், மா, பலா, வாழை, தர்ப்பூசணி, பப்பாளி போன்ற பழங்கள் அதிகளவில் பயிரிடப்படுகின்றன. மல்லிகை, ரோஜா போன்ற பூக்களும் அதிகம் விளைகின்றன.

தோட்டக்கலை பயிரிடும் விவசாயிகளுக்கு உற்பத்தியை அதிகரித்து, வருவாயை பெருக்குவதற்காக மாவட்டத்தில் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம் 2012-2013ன் கீழ், உயர் தொழில்நுட்ப உற்பத்தி பெருக்கு திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது.

இதன் மூலம், பயிரிட தேவையான விதை, உரங்கள், இடுபொருட்கள் மானியமாக வழங்கப்படும். அடர்நடவு முறையில் மாங்காய் பயிரிட, ஒரு ஹெக்டேருக்கு, 26,000 ரூபாய் மானியமாக வழங்கப்படும். அதே போல், காய்கறிகள், பழங்கள் உற்பத்திக்குத் தேவையான ரூபாய் மானியமாக வழங்கப்பட உள்ளது.

இதுகுறித்து, தோட்டக்கலை துறை துணை இயக்குநர் முகமது கலிமுல்லா ஷெரீப் கூறியது: மாங்காய் அதிகம் உற்பத்தி ஆகும் இங்கு, 50, 60 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மாந்தோப்புகள் அதிகம் உள்ளன. அவற்றின் உற்பத்தி திறன் படிப்படியாக குறைந்து கொண்டே வருகிறது. மா உற்பத்தியை அதிகரிக்க, இந்த வீரிய ஒட்டு முறையைப் பயன்படுத்தலாம். இதன் மூலம், அதிக சுவையுடன் கூடிய, மாங்காய் உற்பத்தி அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.

மிளகாயைப் பொறுத்த மட்டில் அதிக திறன், எவ்வித தட்பவெப்ப சூழ்நிலையையும் சமாளித்து வளரக் கூடிய கன்றுகள் அரசு விதைப் பண்ணை மூலம் வழங்கப்படும். பழமையான முறையை விட, தற்போது அறிமுகப்படுத்தப்பட்டு உள்ள, உயர் தொழில்நுட்ப உற்பத்தி பெருக்குத் திட்டம் மூலம் விவசாயிகளுக்கு அதிக பலன் கிடைக்கும். ஆர்வம் உள்ள விவசாயிகள், தங்கள் நிலத்திற்கான பட்டா, சிட்டா அடங்கல் உள்ளிட்ட ஆவணங்களுடன், தங்கள் அருகில் உள்ள தோட்டக்கலை துறை களப்பணியாளரை அணுகலாம் என்றார்.

## விவசாயிகளின் அதிக வருவாய்க்கு தக்காளி சாகுபடி தோட்டக்கலை உதவி இயக்குனர் யோசனை

பதிவு செய்த நேரம்:2012-09-01 09:48:30

கிருஷ்ணராயபுரம், :தக்காளி சாகுபடி செய் தால் விவசாயிகள் அதிக வருவாய் பெறலாம் என்று கிருஷ்ணராயபுரம் தோட்டக்கலை உதவி இயக்குனர் ராஜேந்திரன் யோசனை தெரிவித்தார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது, அன்றாட உணவில் அதிகளவில் வெப்ப மண்டல பயிரான பழுத்த தக்காளி பழங்களை நாம் பயன்படுத்தி வருகிறோம். தக்காளி பழத்தில் வைட்டமின் ஏ சத்து அதிகம் காணப்படுகிறது. கரூர் மாவட்டம் கிருஷ்ணராயபுரம் வட்டாரத்தில் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் இந்தாண்டு பிகேஎம் 1 ரக தக்காளி விதைகள் 50 சதவீத மானியத்தில் வினியோகம் செய்யப்படுகிறது. பிகேஎம் 1 ரக தக்காளி பெரியகுளத்தில் உள்ள தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. தட்டை உருண்டை வடிவ பழங்களை கொண்ட இந்த தக்காளியின் மேற்பரப்பு பச்சை பட்டையுட னும், அடிப்பக்கம் நல்ல சிவப்பு நிறத்துடனும் காணப்படும். 135 நாட்களில் ஒரு ஏக்கருக்கு 12 முதல் 14 டன் வரை மகசூல் தரக்கூடியது. பழங்கள் அதிக தூரம் எடுத்துச்செல்ல உகந்தவை. தக்காளி சாகுபடி செய்யும் விவசாயிகள் நல்ல வடிகால் வசதி உள்ள வண் டல் மண்ணில் சாகுபடி செய்யலாம். மண்ணின் காரம், அமிலத்தன்மை சரி யான அளவில் இருக்க வேண்டும். தக்காளி சாகுபடியில் உயர்விளைச்சல் ரகங்களுக்கு ஏக்கருக்கு 140 முதல் 160 கிராம் விதைகளும், வீரிய ஒட்டு ரகங்களுக்கு ஏக்கருக்கு 30 முதல் 40 கிராம் விதைகளும் போதுமானது. விதைகளை விதைப்பதற்கு முன்பு ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் டிரைக்கோடர்மா அல்லது 10 கிராம் சூடோமோனாஸ் அல்லது 2 கிராமம் கார்பென்டாசின் என்ற அளவில் விதை நேர்த்தி செய்ய வேண் டும். விதைகளை நன்கு தயார் செய்யப்பட்ட மேட்டுபாத்திகளின் குறுக்கே 2.5 செ.மீ இடைவெளியில் கோடுகள் கிழித்து நேர்த்தி செய்யப்பட்ட விதைகளை அதிக நெருக்கமின்றி சீராக விதைத்து மண்ணால் மூடவேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் தக்காளி சாகுபடியில் அதிக லாபம் பெறலாம். எனவே தக்காளி சாகுபடி செய்ய விரும்பும் விவசாயிகள் மானிய விலை யில் விதைகளை தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகத்தில் பெற்று பயன் அடையலாம். இவ்வாறு தோட்டக்கலை உதவி இயக்குனர் ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

## காரைக்காலில் சாகுபடி பாதிப்பு வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும் எம்எல்ஏ நாஜிம் வலியுறுத்தல்

பதிவு செய்த நேரம்:2012-09-01 09:54:48

காரைக்கால், : காரைக்கால் தெற்குத்தொகுதி எம்எல்ஏ நாஜிம் நேற்று நிருபர்களிடம் கூறியதாவது: காரைக்காலில் கடந்தாண்டு 1,200 எக்டேரில் நடந்த குறுவை சாகுபடி நடப்பாண்டு பாதியாக குறைந்துவிட்டது. காவிரிநீர் வராமை, மழையின்மை, எலித்தொல்லை, முறையான கொள்முதல் நிலையங்கள் இல்லாமை போன்ற பல காரணங்களால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது. சம்பாவும் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில், திமுக தலைவர் கருணாநிதி ஆட்சியில் இருந்தபோது, மேட்டூர் அணையை உரிய காலத்தில் திறக்க நடவடிக்கை எடுத்ததால், தமிழகம் மற்றும் காரைக்கால் விவசாயிகள் பயனடைந்தனர். ஆனால், தற்போதைய முதல்வர் ஜெயலிதா வரும் 17ம் தேதி மேட்டூர் அணை திறக்கப்படும் என அறிவித்துள்ளார். இதனால், தமிழக விவசாயிகளே பயனடைய மாட்டார்கள் என்ற நிலை யில் கடைமடை பகுதியான காரைக்கால் விவசாயிகளு க்கு ஒரு பயனும் இல்லை. மேட்டூர் அணை நீர் வரும் என நம்பி விவசாயத்தில் ஈடுபட்டால், அதற்கு பின் வரும் பருவ மழையால் பயிர்கள் அனைத்தும் சேதமடையும் நிலை ஏற்படும். எனவே குறுவை, சம்பா பாதித்த காரைக்காலை வறட்சி மாவட்டமாக அறிவித்து, எக்டேருக்கு ரூ.20 ஆயிரமும், விவசாய தொழிலாளர்கள் குடும்பத்திற்கு ரூ.5 ஆயிரமும் வழங்க புதுச்சேரி முதல்வர் முன்வரவேண்டும். இதுகுறித்து, புதுச்சேரி முதல்வர் ரங்கசாமியிடம் வலியுறுத்தியபோது, உரிய தகவல்கள் சேகரித்து நடவடிக்கை எடுப்பதாக கூறியுள்ளார்.

மேலும், காரைக்கால் மாவட்டம் முழுவதும் அர சின் நில மதிப்பு கடுமையாக உயர்த்தப்பட்டுள்ளதை அனைத்துதரப்பு மக்களும் எதிர்த்து வருகின்றனர். இதை பாதியாக குறைக்க அரசு முன்வரவேண்டும். இல்லையேல், மாவட்ட திமுக சார்பில் மக்களை ஒன்று திரட்டி போராட்டத்தில் ஈடுபடுவோம். இவ்வாறு நாஜிம் கூறினார்.

## சம்பா சாகுபடி சிறப்பு திட்டம் விவசாயிகளுக்கு விளக்கம்

பதிவு செய்த நேரம்:2012-09-01 09:54:40

தஞ்சை: தமிழக அரசு அறிவித்துள்ள சம்பா சாகுபடி சிறப்பு தொகுப்புத் திட்டம் குறித்து விவசாயிகளுக்கு அதிகாரிகள் விளக்கமளித்தனர்.

மேட்டூர் அணையில் போதிய நீர் இருப்பு இல்லாத காரணத்தால் மேட்டூர் அணை திறப்பு நாளான

ஜூன் 12ம் தேதி திறக்கப்படவில்லை. இதனால், டெல்டா மாவட்டங்களில் குறுவை சாகுபடி குறைவான பரப்பளவிலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளது.
இந்நிலையில், குறுவை சாகுபடியில் ஏற்பட்டுள்ள குறைவை ஈடுசெய்யும் வகையில் தமிழகத்தின் நெல் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கிலும் தமிழக அரசால் சம்பா சாகுபடி அதிக பரப்பளவில் மேற்கொள்ள ஒரு சிறப்புத் திட்டத்தை அறிவித்துள்ளது. இச்சிறப்புத் திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு 14 வகையான சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.
வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலர் சந்தீப் சக்சேனா, வேளாண்மை ஆணையர் சிவ்தாஸ் மீனா ஆகியோர் தஞ்சை மாவட்டத்திலுள்ள விவசாயிகளுடன் கலந்துரையாடி எடுத்துரைத்தனர்.

மேலும், வேளாண் துறை அலுவலர்களுக்கு இச்சிறப்பு திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட்டுள்ள இனங்கள் குறித்து விரிவாக எடுத்துரைத்து இத்திட்டத்தின் பயன்கள் விவசாயிகளுக்கு நேரடியாக சென்றடைய அறிவுறுத்தினர். கூட்டத்தில் கலெக்டர் பாஸ்கரன் கலந்துகொண்டார். நேரடி நெல் விதைப்பை சிறப்பினமாகக் கொண்ட இத்திட்டத்தின்கீழ் 50 சதவீத மானியத்தில் நேரடி நெல் விதைப்புக்கான நிலம் தயாரிப்பு, களைக்கொல்லிகள் விநியோகம், 75 சதவீத மானியத்தில் துத்தநாக சல்பேட், ஜிப்சம், நுண்ணூட்டக் கலவை மற்றும் உயிர் உரங்கள் விநியோகம், 100 சதவீத மானியத்தில் சமுதாய நாற்றங்கால் அமைத்து விவசாயிகளுக்கு நடவுக்கு தேவையான நாற்றுகளை விலையில்லா நாற்றுகளாக விநியோகம் செய்தல் மற்றும் 25 சதவீத மானியத்தில் நடவுப் பயிர்களுக்கு அடியுரமாக உரங்கள் விநியோகம் போன்ற இனங்கள் குறித்தும் விவசாயிகளுக்கு விவரிக்கப்பட்டது.
கூட்டத்தில் விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.

## விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்

பதிவு செய்த நேரம்:2012-09-01 11:35:03

சின்னமனூர்,: சின்னமனூர் அருகே குச்சனூரில் மாவட்ட வேளாண் துறை சார்பில் விதை கிராம திட்டத்தின் கீழ், நெல் விதை உற்பத்தியில் தொழில் நுட்பம் குறித்து விவசாயிகளுக்கு மூன்று நாள் பயிற்சி அளிக்கப்பட்டது. வேளாண் இணை இயக்குனர் கோவிந்தராஜ் துவக்கி வைத்தார். குச்சனூர் பேரூராட்சி தலைவர் ரோஜாம்மாள் பாலகிருஷ்ணன் முன்னிலை வகித்தார். நெல் மகசூலுக்கான தொழில் நுட்பங்கள் குறித்து விசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது. உயிர் உர வி தை நேர்த்தி, பூஞ்சாண கொல்லி விதை நேர்த்தி உள்ளிட்ட தொழில் நுட்பங்கள் செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டன.
மண் ஆய்வு முடிவுகள் அடிப்படையில் மண்வள அட்டைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. சின்னமனூர் வேளாண் உதவி இயக்குனர் அழகுநாகேந்திரன், வேளாண் அலுவலர்கள்

இளம்பூரனார், முருகேசன், துணை வேளாண் அலுவலர் புகழேந்தி, விவசாயிகள் கலந்து கொண்டனர்.

பயிற்சிக்கான ஏற்பாடுகளை சின்னமனூர் உதவி வேளாண் அலுவலர்கள் சண்முகன், சிவக்குமார், ஜானகிராமன், பன்னீர்செல்வம், தமிழ்செல்வி செய்திருந்தனர்.

## உரம் விற்பனையை கண்காணிக்க தனிப்பிரிவு

பதிவு செய்த நேரம்:2012-09-01 10:58:57

விருதுநகர், : `மாவட்டத்தில் உரம் விற்பனையை கண்காணிக்க தனிப்பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. இப்பிரிவிற்கு விவசாயிகள் உரம் விற்பனை தொடர்பான புகார்களை போனில் தெரிவிக்கலாம் என கலெக்டர் ஹரிஹரன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் தெரிவித்ததாவது: விருதுநகர் மாவட்டத்தில் வேளாண்மைத்துறை மூலம் உரங்கள் விநியோகம் மற்றும் விற்பனை செய்யப்படுவதை கண்காணிக்க வேளாண்மை இணை இயக்குநர் தலைமையில் உர கண்காணிப்பு தனிப்பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் வேளாண்மை இணை இயக்குநர் அலுவலக தொலைபேசி எண் 04562-252705ல் தொடர்பு கொண்டு உரங்கள் தொடர்பான புகார்களை தெரிவிக்கலாம். உர கண்காணிப்பு தனிப்பிரிவு காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை செயல்படும். மேலும் விருதுநகர் வேளாண்மை உதவி இயக்குநர்(தரக்கட்டுப்பாடு) 9443990964, வேளாண்மை அலுவலர்(தரக்கட்டுப்பாடு) 9488404387, ராஜபாளையம் வேளாண்மை உதவி இயக்குநர் 9994602078, திருவில்லிபுத்தூர் வேளாண்மை உதவி இயக்குநர் 9442565452, வத்திராயிருப்பு வேளாண்மை உதவி இயக்குநர் 9442665257, சிவகாசி வேளாண்மை உதவி இயக்குநர் 9442130537, வெம்பக்கோட்டை வேளாண்மை உதவி இயக்குநர் 9940964673, சாத்தூர் வேளாண்மை உதவி இயக்குநர் 9442886086, விருதுநகர் வேளாண்மை உதவி இயக்குநர் 9442922857, அருப்புக்கோட்டை வேளாண்மை உதவி இயக்குனர் 9443854725, காரியாபட்டி வேளாண்மை உதவி இயக்குநர் 9626227506, ம.ரெட்டிய பட்டி வேளாண்மை உதவி இயக்குநர் 9994171220, நரிக்குடி வேளாண்மை உதவி இயக்குநர் 9865575946 ஆகிய செல் போன் எண்களில் தொடர் பு கொண்டு புகார்களை தெரிவிக்கலாம். இவ்வாறு கலெக்டர் தெரிவித்துள்ளார்.

## விருத்தாசலம் வேளாண் தோட்டக்கலை பண்ணையில் ஆட்சியர் ஆய்வு

பதிவு செய்த நேரம்:2012-09-01 10:46:35

விருத்தாசலம், : விருத்தாசலம் அரசு வேளாண் தோட்டக்கலை பண்ணையில் தானே புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்க 5 லட்சம் முந்திரி வீரிய ஒட்டு ரக மரக்கன்றுகள், மா, கொய்யா போன்ற மரக்கன்றுகள் தயாரிக்கும் பணியை மாவட்ட ஆட்சித் தலைவர் ராஜேந்திர ரத்னூ பார்வையிட்டு ஆய்வு செய்தார்.
பின்னர் அவர் கூறுகையில் 'கடலூர் மாவட்டத்தில் 25 லட்சம் மரக்கன்றுகள் நட முயற்சிகள் நடந்து வருகிறது. அரசு மூலம் 15 லட்சம் மரக்கன்றுகளும், தனியார் மூலம் 10 லட்சம் மரக்கன்றுகளும் தயாரிக்கப்பட்டு வருகிறது. அரசு சார்பில் இதுவரை 3 லட்சத்து 15 ஆயிரம் மரக்கன்றுகள் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. விவசாயிகளுக்கு நீர்பாசன வசதிக்கு பல்வேறு திட்டங்கள் மூலம் ஆழ்குழாய் கிணறு, சொட்டுநீர் பாசன வசதி கள் செய்யப்பட்டு வருகிறது. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மரங்களை வெட்டுவதற்கு மானியம் வழங்கப்பட்டு வருகிறது. அரசு விவசாயிகளுக்கு உதவ தயாராக உள்ளது' என்றார்.
வேளாண் தோட்டக்கலை உதவி இயக்குநர் ராமலிங்கம், விருத்தாசலம் உதவி இயக்குநர் மணி மொழி, தோட்டக்கலைஅலுவலர் சீனிவாசன் ஆகியோர் உடனிருந்தனர்.

## முட்டை உற்பத்திக்கு சாதகமான தட்ப வெப்பநிலை

பதிவு செய்த நேரம்:2012-09-01 10:13:08

நாமக்கல், : நாமக்கல் கால்நடை வானிலை ஆலோசனை மையம் வரும் 4 நாட்களுக்கான வானிலை அறிக்கையை வெளியிட்டுள்ளது. அதில் கூறியிருப்பதாவது:
நாமக்கல் மற்றும் அதன் சுற்றுப்புற பகுதியில், வரும் 4 நாட்களும் வானம் பொதுவான மேகமூட்டத்துடன் காணப்படும். 3ம் தேதி 4 மி.மீ, 4ம் தேதி 5 மி.மீ மழை பெய்ய வாய்ப்புள்ளது. காற்றின் வேகம், மணிக்கு 8 கி.மீ வேகத்தில் மேற்கில் இருந்து வீசும். வெப்பநிலை அதிகபட்சம் 93 டிகிரி. குறைந்தபட்சம் 75 டிகிரி. காற்றின் ஈரப்பதம் அதிக அளவு 80 சதவீதமானவும், குறைந்த அளவு 57 சதவீதமாகவும் காணப்படும்.
தொடர்ந்து முட்டை உற்பத்திக்கு சாதகமான தட்பவெப்பநிலையே நிலவுகிறது. ஆயினும் தீவன மூலப்பொருட்களில் குறிப்பாக, சூரியகாந்தி புண்ணாக்கில் அப்ராநச்சும், மக்காசோளத்தில் அப்ளா நச்சும் காணப்படுகிறது. இதன் உபயோகத்தில் கவனம் செலுத்தவேண்டும்.
கடந்த வாரம் கோழியின நோய் ஆய்வகத்தில் ஆய்வு செய்யப்பட்டதில், இறந்த கோழிகள் பெரும்பாலும் குடற்புண் மற்றும் ஈகோலை சம்பந்தப்பட்ட நோயால் இறந்திருப்பது தெரிய வந்துள்ளது. எனவே பண்ணையாளர்கள் தரமான தீவன மூலப்பொருட்களை பயன்படுத்த

வேண்டும். குடிநீரில் ஈகோலை கிருமிகள் உள்ளனவா? என்பதை ஆய்வு செய்து, அதற்கு ஏற்றார்போல குடிநீர் சுத்திகரிப்பு மருந்துகளை பயன்படுத்த வேண்டும். தட்ப வெப்ப அளவுகளில் மாற்றங்கள் காணப்பட்டு வருவதால், நாட்டுக்கோழிகளில் ராணிக்கெட் நோயின் தாக்கம் காணப்படுகிறது. இளம் குஞ்சுகளுக்கு எப்1 அல்லது ஸசோட்டா சொட்டு மருந்து கண் அல்லது மூக்கு வழியாகவும், 8 வார வயதுடைய கோழிகளில் இறக்கையிலும், பெரிய கோழிகளுக்கு ஆர்டிவிகே தடுப்பூசியும் போட வேண்டும். கிராமத்தில் உள்ள அனைத்து கோழிகளுக்கும், ஒரே சமயத்தில் கொடுக்க வேண்டும். இதனால் நோய் தாக்கும் அபாயம் 3 மாதத்துக்கு இருக்காது. இவ்வாறு வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கீழ்பவானி பாசனத்துக்கு தண்ணீர் திறக்காதது ஏன்? அதிகாரிகளுடன் விவசாயிகள் கடும் மோதல் கலெக்டர் தலைமையில் நடந்த குறைதீர் கூட்டத்தில் பரபரப்பு

பதிவு செய்த நேரம்:2012-09-01 09:45:33

ஈரோடு, : அரசாணைகளின் படி கீழ்பவானி பாசனத்திற்கு தண்ணீர் திறக்காதது ஏன் என்று விளக்கம் அளிக்க கோரி பொதுப்பணித்துறை அதிகாரிகளுடன் விவசாயிகள் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதனால் வேளாண் குறைதீர்க்கும் கூட்டத்தில் பரபரப்பு ஏற்பட்டது.

ஈரோடு மாவட்ட விவசாயிகளுக்கான மாதாந்திர குறைதீர்க்கும் கூட்டம் கலெக்டர் அலுவலகத்தில் நடைபெற்றது. கலெக்டர் சண்முகம் தலைமை தாங்கினார். மாவட்ட வருவாய் அலுவலர் கணேஷ், வேளாண் இணை இயக்குநர் கிருஷ்ணமூர்த்தி, கோட்டாட்சியர்கள் சுகுமார், பழனிச்சாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் விவசாயிகள் பேசியதாவது: பவானிசாகர் அணையில் இருந்து தடப்பள்ளி, அரக்கன்கோட்டைக்கு தண்ணீர் திறக்கும்போது 5 டிஎம்சி கொள்ளளவு இருந்தது. இதில் கீழ்பவானிக்கு 4.4 டிஎம்சி தண்ணீரை இருப்பு வைத்துக்கொண்டு மீதமுள்ள தண்ணீரை மட்டுமே திறந்திருக்க வேண்டும். ஆனால் விதிமுறைகளை மீறி அதிகாரிகள் செயல்பட்டுள்ளனர். இதனால் கீழ்பவானிக்கு உட்பட்ட 2.7 லட்சம் ஏக்கர் பாசன நிலங்கள் தற்போது வானம் பார்த்த பூமியாக மாற்றிவிட்டனர். கீழ்பவானி பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவிடுவது குறித்து அரசாணைகளில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. இதே போல கோர்ட் தீர்ப்புகளும் உள்ளன. அரசாணை,கோர்ட் தீர்ப்பு இரண்டையும் மீறி பொதுப்பணித்துறையினர் தண்ணீர் பங்கீடு விவகாரத்தில் செயல்பட்டுள்ளனர்.

அரசாணையின் படி கீழ்பவானி பாசனத்திற்கு கடந்த மாதம் 15ம் தேதி தண்ணீர் திறந்துவிட்டிருக்க வேண்டும். ஏன் தண்ணீர் திறந்துவிடவில்லை என்பதை பொதுப்பணித்துறையினர் விளக்க வேண்டும். தற்போது மேட்டூர் அணையில் இருந்து சம்பா

சாகுபடிக்கு இம்மாதம் 17ம் தேதி தண்ணீர் திறக்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது. இதே போல பவானிசாகர் அணையில் இருந்து கீழ்பவானிக்கு எப்போது தண்ணீர் திறக்கப்படும் என்பதை பொதுப்பணித்துறையினர் அறிவிக்க முன்வரவேண்டும். நீர்மின்நிலையங்களில் உள்ள 5.77 டிஎம்சி தண்ணீரை பவானிசாகர் அணைக்கு திறந்துவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். சக்தி சர்க்கரை ஆலை நிர்வாகம் விவசாயிகளுக்கு ரூ.120 கோடிக்கு மேல் பணம் வழங்காமல் பாக்கி வைத்துள்ளது. இதை வாங்கித்தர மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒவ்வொரு மாதமும் தவணை கூறிக்கொண்டே இருக்கின்றனர். மாவட்ட நிர்வாகம் கடுமையான உத்தரவுகளை பிறப்பிக்க வேண்டும். ஆலை நிர்வாகத்தினை கண்டித்து வருகின்ற 3ம் தேதி உண்ணாவிரத போராட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

## பாசனத்துக்கு தண்ணீர் நிறுத்தம் பவானிசாகர் நீர்மட்டம் உயருகிறது

பதிவு செய்த நேரம்:2012-09-01 09:45:25

கோபி, : தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசன வாய்க்கால்கள் மூலம், கோபி மற்றும் அதைச்சுற்றியுள்ள காசிபாளையம், புதுக்கரைப்புதூர், கூகலூர், மேவானி, பி.மேட்டுப்பாளையம், கள்ளிப்பட்டி, கணக்கம்பாளையம், துறையம்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 24 ஆயிரத்து 500 ஏக்கர் நிலம் ஆண்டுதோறும் இருபோக சாகுபடிக்கு பாசன வசதி பெறுகின்றன. இந்த ஆண்டு முதல் போக சாகுபடிக்கு கடந்த மே மாதம் பவானிசாகர் அணையில் இருந்து தண்ணீர் விடப்பட்டது. அப்போது அணையின் நீர்மட்டம் சுமார் 70 அடி வரை இருந்ததாலும், பருவ மழை பெய்யும் என்ற நம்பிக்கையாலும் தண்ணீர் திறக்கப்பட்டது. ஆனால் இந்த ஆண்டு பருவ மழை பொய்த்துப்போன நிலையில் அணையின் நீர்மட்டம் கடந்த மாதமே 30 அடியாக சரிந்தது. இதனால் அணையில் இருந்து முதலில் சுழற்சி முறையில் விடப்பட்ட தண்ணீர் பின்னர் முற்றிலுமாக நிறுத்தப்பட்டது. இதனால் தடப்பள்ளி,அரக்கன்கோட்டை பாசன பகுதிகளில் பயிரிடப்பட்டிருந்த நெல் பயிர்கள் கருகும் நிலை ஏற்பட்டது. இதற்கிடையே நீலகிரி மாவட்டத்தில் கடந்த வாரம் பெய்த மழையால் அணை நீர்மட்டம் 37 அடியாக உயர்ந்ததால் பயிர்களை காக்க உயிர் தண்ணீர் விட விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். இதனையடுத்து கடந்த வாரம் பாசனத்திற்காக விநாடிக்கு 850 கன அடி தண்ணீர் திறப்பு விடப்பட்டதால் நீர்மட்டம் மளமளவென குறையத் துவங்கியது. தற்போது பாசனப்பகுதிகளில் ஆங்காங்கே பரவலாக மழை பெய்துள்ளதால் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்துக்கு பவானிசாகர் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடுவது நேற்று காலை நிறுத்தப்பட்டது. இதற்கிடையில் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மாயார் உள்ளிட்ட இடங்களில் நல்ல மழை பெய்து, அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. நேற்று முன்தினம் அணைக்கு வினாடிக்கு 297 கனஅடி மட்டுமே வந்து கொண்டிருந்த நிலையில் நேற்று மாலை நிலவரப்படி அணைக்கு 2370 கனஅடி தண்ணீர் வந்து கொண்டுள்ளது. தண்ணீர் திறந்து விடுவது

நிறுத்தப்பட்டுள்ளதால் வரும் தண்ணீர் முழுவதும் தேக்கப்படுவதால் அணையின் நீர்மட்டம் நேற்று 34.46 அடியில் இருந்து 35.60 அடியாக உயர்ந்துள்ளது. அணை நீர்மட்டம் மேலும் உயர வாய்ப்புள்ளது.

## தேயிலை விவசாயிகளுக்கான கருத்தரங்கம்

பதிவு செய்த நேரம்:2012-09-01 10:06:25

கூடலூர்,: கூடலூரில் தேயிலை சிறு விவசாயிகளுக்கான கருத்தரங்கம் தேயிலை வாரியத்தின் சார்பில் நேற்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் தேயிலை வாரிய செயல் இயக்குனர் அம்பலவாணன் தலைமை தாங்கினார். உதவி இயக்குனர் செல்வம் வரவேற்றார். ஆதிவாசிகளின் நல சங்க தலைவர் ஆலுவாஸ்,பாரதிநகர் சிறு விவசாயிகளின் தேயிலை சங்க தலைவர் கந்தசாமி சிறுவிவசாயிகளுக்கு பிரச்னை குறித்து விளக்கம் அளித்தனர். சிறு தேயிலை விவசாயிகளின் சங்கம், பயனாளிகள் அமைப்பு நிர்வாகி ராஜ்குமார், குன்னூர் உப்பாசி விஞ்ஞானி ராமமூர்த்தி , மூணாறு உப்பாசி தலைமை ஆலோசக அலுவலர் துரைராஜ் ஆகியோர் சிறு தேயிலைவிவசாயிகளுக்கு பயனடையும் விதம், சாகுபடி செலவு குறைத்தல் ,நவீன இயந்திரத்தை பயன்படுத்தல் குறித்த விளக்கம் அளித்தனர். தேயிலை வாரிய செயல் இயக்குனர் சிறப்புரை ஆற்றினார். முடிவில் உதவி இயக்குனர் தாஸ் நன்றி கூறினார், இதில் கூடலூர், பந்தலூர் பகுதிகளை சேர்ந்த 700 மேற்பட்ட சிறு விவசாயிகள் மற்றும் சங்க

## கூடலூரில் விசாயிகளுக்கு 100% மானியத்தில் தெளிப்பு நீர் கருவி

பதிவு செய்த நேரம்:2012-09-01 10:05:31

கூடலூர்,: கூடலூரில் தோட்ட கலை, மலைப்பயிறு துறை சார்பில் விவசாயிகளுக்கு 100 சதவீத மானியத்தில் தெளிப்பு நீர் கருவிகள் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு தோட்ட கலை துறை இணை இயக்குனர் மோகன் தலைமை தாங்கினார். உதவி இயக்குனர் ஜெயலட்சுமி வரவேற்றார். நிகழ்ச்சியில் முன்னாள் சுற்றுலா துறை அமைச்சர் மில்லர் கலந்து கொண்டு 13 பயனாளிகளுக்கு தெளிப்பு நீர் கருவிகள் வழங்கினார். இணை இயக்குனர் மணி, பிரிமியர் இரிகேசன் கள அலுவலர் அய்யாகண்ணு ஆகியோர் இத்திட்டம் தொடர்பாக விளக்கம் அளித்தனர். நிகழ்ச்சியில் நகராட்சி துறை தலைவர் ராஜா தங்கவேல் ஒன்றிய செயலாளர் பத்மநாதன் ,கிடங்கு மேலாளர் ராமசாமி மற்றும் விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர். முடிவில் விதை அலுவலர் ராமலிங்கம் நன்றி கூறினார்.

## பெரம்பலூர் மாவட்டத்தில் விவசாயிகளுக்கு வட்டியில்லா கடன் வழங்கும் சிறப்பு முகாம்

பதிவு செய்த நேரம்:2012-09-01 10:18:19

பெரம்பலூர், : பெரம்பலூர் மாவட்டத்தில் விவசாயிகளுக்கு வட்டியில்லா கடன் சிறப்பு முகாம் வரும் 8ம் தேதி முதல் துவங்குகிறது. கலெக்டர் தரேஸ் அஹமது வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு : பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கு வட்டியில்லா கடன் வழங்க சிறப்பு முகாம்கள் ஊராட்சி ஒன்றிய அளவில் நடைபெற உள்ளது. பெரம்பலூர் ஒன்றியத்திற்குட்பட்ட விவசாயிகளுக்கு வருகிற 8ம் தேதி பெரம்பலூர் ஒன்றிய அலுவலகம், வேப்பூர் ஒன்றியத்திற்குட்பட்ட விவசாயிகளுக்கு 9ம் தேதி குன்னம் அரசு மேல்நிலைப்பள்ளி, வேப்பந்தட்டை ஒன்றியத்திற்குட்பட்ட விவசாயிகளுக்கு 15ம் தேதி வேப்பந்தட்டை தாசில்தார் அலுவலகம், ஆலத்தூர் ஒன்றியத்திற்குட்பட்ட விவசாயிகளுக்கு 16ம் தேதி பாடாலூர் அரசு மேல்நிலைப்பள்ளி ஆகிய இடங்களில் காலை 10 மணி முதல் வட்டியில்லா கடன் வழங்கும் சிறப்பு முகாம் நடைபெற உள்ளது. முகாம்களில் அந்தந்த ஒன்றியங்களில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் பங்கு பெறுகிறது. முகாமிற்கு வரும் விவசாயிகள் பங்குத்தொகை (கடன் அளவிற்கு ஏற்ப) 10 சதவிகிதம் செலுத்த வேண்டும். 3 பாஸ்போர்ட் அளவு புகைப்படம், சிட்டா நகல், விஏஓ கையொப்பமிட்ட ஆஸ்தி பொறுப்பு பட்டியல், வணிக வங்கியில் கடன் இல்லா சான்று, ஒரு ஜாமீன் பொறுப்பாளருடன் கலந்து கொள்ளலாம். ஜாமீன்தாரரும் மேற்கண்ட ஆவணங்களுடன் வர வேண்டும். தேவைப்பட்டால் ஜாமீன் தாரரும் முகாமிலேயே வட்டியில்லா கடன் பெற்றுக்கொள்ளலாம். பயிர்கடன் பெற்ற விவசாயிகள் தவணை தேதிக்குள் அசலை திரும்ப செலுத்தினால் வட்டி செலுத்த தேவையில்லை. தவணை தேதிக்கு பின்னர் செலுத்தினால் சங்க நடைமுறைகளுக்கு உட்பட்டு வட்டி செலுத்த வேண்டும். எனவே பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் முகாம்களில் கலந்து பயன்பெறலாம். இவ்வாறு கலெக் டர் தெரிவித்துள்ளார்.

## 10 கண்மாய்களுக்கு பாசனநீர் செல்ல ரூ.10 கோடியில் கால்வாய் சீரமைப்பு

பதிவு செய்த நேரம்:2012-09-01 10:51:26

மதுரை, :பத்து கண்மாய்களுக்கு பாசன நீரை கொண்டு செல்லும் வகையில் ரூ10 கோடி செலவில் சுண்ணாம்பூர் கால்வாய் சீரமைப்பு பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது. மதுரை மாவட்டம், தெற்குத்தெரு அருகே மருதூர் கண்மாய் உள்ளது. இந்த கண்மாய்க்கு ஆரப்பள்ளம் பகுதியில் இருந்து மழைநீர் வந்துசேரும். இந்த கண்மா யிலிருந்து திருவாதவூர் வரை சுமார் 10 கிமீ தூரத்திற்கு தண்ணீரை கொண்டு செல்லும் சுண்ணாம்பூர் பாசன கால்வாய்

உள்ளது. இந்த கால்வாயின் பல பகுதிகள் சிதைந்துள்ளன. அடிப்பகுதியிலும் கற்கள் பெயர்ந்திருப்பதால் தண்ணீர் வீணானது. அதிக தண்ணீர் வரும்போது கால்வாய் உடைந்து வயல்வெளியில் தண்ணீர் பாய்ந்தது.
இந்த கால்வாயை மேம்படுத்தவும், மருதூர் கண்மாய் மடைப்பகுதியில் தண்ணீர் வீணாகாமல் செல்ல சிறிதளவு உயரத்தில் தொட்டிப்பாலம் அமைப்பது, கால்வாயின் இரு பக்க கரைகளையும் சீரமைப்பது என திட்டமிடப்பட்டது. இதற்காக பொதுப் பணித்துறை நீர்வள ஆதார அமைப்பு சார்பில் நபார்டு வங்கி நிதி உதவியுடன் ரூ.10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதில் சுண்ணாம்பூர் வாய்க்காலுக்கு பிரிவு வாய்க்கால் அமைப்பது உள்ளிட்ட பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது.
இதுகுறித்து பொறியா ளர் ஒருவர் கூறுகையில், 'கடந்த ஓராண்டாக பணிகள் நடந்து வருகிறது. இன்னும் 3 மாதங்களில் பணிகளை முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. பணிகள் முடிந்த பின்னர் இக்கால்வாயில் தண்ணீர் வேகமாகவும், விரயமில்லா மலும் செல்லும். இதன் மூலம் இப்பகுதியிலுள்ள 10 கண்மாய்கள் பலனடையும். கால்வாயின் ஒரு பகுதியில் நல்ல சாலை வசதியும் செய்யப்படுவது இப்பகுதி மக்களுக்கு அதிக பலன் தரும்,' என்றார்.

## விவசாயிகள் ஆலோசனை கூட்டம்

பதிவு செய்த நேரம்:2012-09-01 10:30:38

உடுமலை, : உடுமலை அட்மா வட்டார தொழில்நுட்ப குழு மற்றும் விவசாயிகள் ஆலோசனை குழுவின் மாதாந்திர கூட்டம் வேளாண்மை உதவி இயக்குனர் மகாலிங்கம் முன்னிலையில் நடந்தது.
வட்டார விவசாயிகள் ஆலோசனைக்குழு தலைவர் ராதாகிருஷ்ணன், உறுப்பினர்கள், வட்டார தொழில்நுட்ப குழுவின், அட்மா அலுவலர்கள் கலந்து கொண்டனர். உடுமலை அட்மாவிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இலக்குகள் பிரித்தளிக்கப்பட்டு தோட்டக்கலை துறைக்கு ரூ.77415, வேளாண்மை பொறியியல் துறைக்கு ரூ.48500, கால்நடை பராமரிப்பு துறைக்கு ரூ.32000, பட்டு வளர்ச்சி துறைக்கு ரூ.50500 மதிப்பிலான காசோலைகள் வழங்கப்பட்டது.
இந்த இலக்குகளை விரைவில் முடிக்க அந்தந்த துறை அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது. 2012-13 ஆண்டிற்கான அட்மா செயல்திட்டம் துறை வாரியாக தயாரித்து செப்டம்பர் 11க்குள் வழங்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது.
வட்டார அளவில் இரண்டு வருவாய் கிராமங்களுக்கு ஒரு உழவர் நண்பர் பணியமர்த்தப்பட்டுள்ளார். இவர்களுக்கான முதல் கூட்டம் வரும் 11 ம் தேதி வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகத்தில் நடக்கவுள்ளது.
அடுத்த அட்மா மாதாந்திர கூட்டம் 11 ம் தேதி நடக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

கூட்டத்திற்கான ஏற்பாடுகளை வட்டார தொழில்நுட்ப மேலாளர் ராகவர்மணி, தொழில்நுட்ப வல்லுனர் ரம்யா, சங்கர் ஆகியோர் செய்திருந்தனர்.

## வேர்கரையான் தாக்குதல் மக்காச்சோளம் பயிர் பாதிக்கும் சூழ்நிலை

பதிவு செய்த நேரம்:2012-09-01 10:59:48

உளுந்தூர்பேட்டை, : விழுப்புரம் மாவட்டம் உளுந்தூர்பேட்டை மற்றும் அதை சுற்றியுள்ள வண்டிப்பாளையம், சின்னக்குப்பம், சேந்தமங்கலம், பிள்ளையார்குப்பம், பாண்டூர், புகைப்பட்டி, எறையூர் உள் ளிட்ட 30க்கும் மேற்பட்ட கிராமங்களில் உள்ள விவசாயிகள் அதிகளவு மக்காச்சோளம் பயிரிட்டு வருகின்றனர்.மேற்கண்ட கிராமங் களில் கடந்த 2 மாதங்களுக்கு முன்பு மக்காச்சோளம் பயிரிட்டு இருந்தனர்.
தற்போது பூ வைக்கும் தருவாயில் மக்காச்சோளம் பயிர் உள்ளது. இந் நிலையில் மக்காச்சோளம் பயிரை அதன் வேர்பகுதியில் வேர்கரையான் நோய் தாக்கி வருவதாக விவசாயிகள் கூறுகின்றனர். இந்த வேர்கரையான் மக்காச்சோளம் பயிரை தாக்குவதால் மக்காச் சோள செடிகள் வளர்ச்சி அடையாமலும், பூ பூக்காமலும் பாதிப்படைந்து வருகிறது. இந்த வேர் கரையான் தாக்கிய செடியில் இருந்து அருகில் உள்ள மற்ற மக்காச்சோளம் பயிரையும் வேர்கரையான் தாக்கி வருவதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். இந்த வேர்கரையான் தாக்குதலால் உளுந்தூர்பேட்டை மற்றும் திருநாவலூர் பகுதியில் சுமார் 200 ஏக்கர் பரப்பளவிலான மக்காச்சோளம் பாதிப்படையும் நிலை உள்ளது.
இந்த வேர்கரையான் நோயை கட்டுப்படுத்த விவசாயத்துறை அதிகாரிகள் பார்வையிட்டு மானிய விலையில் பூச்சிக்கொல்லி மருந்துகள் வழங்கி மக்காச்சோளம் பயிரிட்ட விவசாயிகளுக்கு பாதிப்பின்றி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என உளுந்தூர்பேட்டை மற்றும் திருநாவலூர் பகுதி விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர்.

## நீர்மட்டம் 42 அடியாக உயர்வு கிருஷ்ணகிரி அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு

பதிவு செய்த நேரம்:2012-08-31 09:41:17

கிருஷ்ணகிரி, : கிருஷ்ணகிரி மாவட்டம் கெலவரப்பள்ளி அணை நிரம்பிதைத் தொடர்ந்து கிருஷ்ணகிரி அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். தென்மேற்கு பருவ மழையின் காரணமாக கர்நாடக அணைகளில் இருந்து கூடுதல் தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. இதனால் கிருஷ்ணகிரி மாவட்ட எல்லையில் ஓசூர் அருகே உள்ள கெலவரப்பள்ளி அணைக்கு நீர்வரத்து அதிகரித்தது. அதன்படி, கடந்த 28ம் தேதி அணைக்கு 826 கன அடி தண்ணீர் வந்தது. அதிலிருந்து 574 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டது.

இதையடுத்து வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டது. கெலவரப்பள்ளி, சென்னசந்திரம், முத்தாளி, ஆலூர், புக்கசாகரம், பாகலூர், தொரப்பள்ளி அக்ரஹாரம், மோரனப்பள்ளி, பாத்தகோட்டா, குமுதேப்பள்ளி, உத்தனப்பள்ளி, அயர்னப்பள்ளி, உலகம், உள்ளட்டி பகுதிகளில் தென்பெண்ணை ஆற்றின் தாழ்வான பகுதியில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு ஓசூர் வட்டாட்சியர் சத்யநாராயணன் அறிவித்தார்.
இந்நிலையில் கெலவரப்பள்ளி அணையில் இருந்து திறந்துவிடப்பட்ட தண்ணீர் தென்பெண்ணை ஆற்றின் வழியாக கிருஷ்ணகிரி அணைக்கு வந்து சேர்ந்தது. முதல் நாளில் வினாடிக்கு 116 கன அடியாக இருந்த நீர்வரத்து, நேற்று பிற்பகல் நிலவரப்படி வினாடிக்கு 389 கன அடியாக உயர்ந்தது. இதனால் மூன்று நாட்களுக்கு முன்பு 40.6 அடியாக இருந்த கிருஷ்ணகிரி அணையின் நீர்மட்டம் 42 அடியாக உயர்ந்துள்ளது. தொடர்ந்து இதே போல் தண்ணீர் வந்தால் அணையின் மொத்த உயரமான 52 அடியை இன்னும் ஒரு வாரத்தில் எட்டிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
அணைக்கு தொடர்ந்து தண்ணீர் வந்து கொண்டிருப்பதால் முதல்போக சாகுபடிக்காக நடவு செய்துள்ள நெற்பயிர்கள் பிழைத்துகொள்ளும் என்ற நம்பிக்கையில் விவசாயிகள் பெரும் மகிழ்ச்சியடைந்துள்ளனர்

## ஊட்டியை போன்ற சீதோஷ்ண நிலை தேன்கனிக்கோட்டையில் 2வது நாளாக சாரல் மழை ராகி விவசாயிகள் மகிழ்ச்சி

பதிவு செய்த நேரம்:2012-08-31 09:40:05

தேன்கனிக்கோட்டை, : கிருஷ்ணகிரி மாவட்டம் தளி, அஞ்செட்டி மற்றும் தேன்கனிக்கோட்டை பகுதிகளில் நேற்று 2வது நாளாக சாரல் மழை பெய்தது. தொடர் மழை காரணமாக இப்பகுதியில் ஊட்டியை போன்ற சீதோஷ்ண நிலை காணப்படுகிறது.
கிருஷ்ணகிரி மாவட்டம் தளி, அஞ்செட்டி மற்றும் தேன்கனிக்கோட்டையில் கடந்த சில நாட்களாக மழை பெய்து வருகிறது. தேன்கனிக்கோட்டையில் நேற்று முன்தினம் மாலை துவங்கிய சாரல் மழை விடிய விடிய பெய்தது. இதனால், நேற்று பகல் முழுவதும் கடும் குளிர் வாட்டி எடுத்தது. இதனைத் தொடர்ந்து, பிற்பகல் 3 மணியளவில் மழை பெய்தது. தொடர்ந்து தூறல் போட்டவாறு இருந்தது. இந்த மழையால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. பள்ளிக்கு

செல்லும் மாணவர்களும், வேலைக்கு செல்லும் தொழிலாளர்களும் பெரிதும் சிரமப்பட்டனர். மழையால் கடைவீதியும் வெறிச்சோடி காணப்பட்டது. இந்த மழை, விவசாயிகளுக்கு மகிழ்ச்சியை அளித்துள்ளது. ஏற்கனவே தவறிய பருவமழையால் காலம் கடந்து சாகுபடி செய்யப்பட்ட ராகி, நிலக்கடலை பயிரில் தற்போது களை எடுக்கும் பணியில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். தொடர் மழையால் வயல்களில் தண்ணீர் தேங்கியுள்ள நிலையில் களை எடுக்கும் பணி எளிதாகியுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். மேலும், இந்த மழையால் நிலக்கடலை, ராகி பயிரில் மகசூல் அதிகரிக்க வாய்ப்புள்ளதாகவும் நம்பிக்கை தெரிவித்தனர்.

## நீர்பிடிப்பு பகுதியில் தொடர்ந்து கனமழை சிறுவாணி அணையில் நீர் மட்டம் அதிகரிப்பு

பதிவு செய்த நேரம்:2012-08-31 10:09:28

கோவை, :சிறுவாணி அணையில் மழை நீடிப்பதால் நீர் மட்டம் உயர்ந்து வருகிறது. சிறுவாணி அணையின் நீர் பிடிப்பு பகுதியில் கடந்த 4 நாட்களாக மழை பெய்து வருகிறது. கடந்த 28ம் தேதி 37 மி.மீ மழையும், கடந்த 29ம் தேதி 34 மி.மீ மழையும், நேற்று 47 மி.மீ மழையும் பெய்தது. அணையின் நீர் பிடிப்பு பகுதி 84 சதுர கி.மீ பரப்பில் அமைந்திருக்கிறது. அணைக்கு முக்தியாறு, பட்டியாறு, பாம்பாறு, வெள்ளிங்கிரி ஓடை உட்பட 36 நீரோடை வழியாக தண்ணீர் வருகிறது. அணையின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது. நேற்று காலை அணை நீர் மட்டம் 869.00 மீட்டராக (கடல் மட்ட உயர அளவின் படி) உயர்ந்தது. ஒரே நாளில் 10 செ.மீ அளவிற்கு நீர் மட்டம் உயர்ந்துள்ளது. அணையின் நில மட்டத்தில் இருந்து 5 மீட்டர் உயரத்திற்கு நீர் தேங்கியுள்ளது. அணையின் நீர் மட்டம் மேலும் 10 மீட்டர் உயர்ந்தால் அணை நிரம்பி வழியும். அணை நிரம்ப, அணை நீர் பிடிப்பு பகுதியில் 1000 மி.மீ மழை பெய்யவேண்டும் என குடிநீர் வடிகால் வாரியத்தினர் தெரிவித்தனர்.சிறுவாணி அணை அடிவாரத்தில் 16 மி.மீ மழை பெய்தது. நொய்யல் ஆற்றில் மிக குறைந்த அளவு மட்டுமே தண்ணீர் பாய்கிறது.

தினமும் 50 மி.மீ அளவை விட கூடுதலாக மழை பெய்தால் ஆற்றில் நீர் வரத்து அதிகரிக்கும். நொய்யலில் முதல் தடுப்பணையான சித்திரை சாவடி அணையில் 50 செ.மீ உயரத்திற்கு நீர் தேங்கியுள்ளது. கனமழை வந்தால் மட்டுமே குளங்களுக்கு நீர் திறக்க முடியும் என பொதுப்பணித்துறை நீர்வள ஆதார அமைப்பினர் தெரிவித்தனர்.

## நந்தியாறு, கூழையாறை தூர்வார வேண்டும் விவசாய சங்கம் கோரிக்கை

பதிவு செய்த நேரம்:2012-09-01 10:37:41

திருச்சி,: லால்குடி பகுதியில் நந்தியாறு, கூழையாறை தூர்வார வேண்டும் என்று விவசாய சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

தமிழக ஏரி மற்றும் ஆற்றுப்பாசன விவசாய சங்க மாநில தலைவர் விசுவநாதன், திருச்சி கலெக்டரிடம் அளித்துள்ள கோரிக்கை மனு: 2005ம் ஆண்டு நந்தியாறில் ஏற்பட்ட வெள்ள பெருக்கால் லால்குடி வட்டத்தில் விவசாய நிலங்களில் தண்ணீர் புகுந்து கோடிக்கணக்கில் நஷ்டம் ஏற்பட்டது. இதுநாள் வரை தூர்வாரப்பட வில்லை. எனவே நந்தியாறை தூர்வாரி கரையை பலப்படுத்த வேண்டும்.

இதேபோல் லால்குடி வட்டம் திண்ணியம் முதல் செங்கரையூர் வரை கூழையாறு ஓடுகிறது. இந்த வடிகால் வாய்க்கால் இதுவரையிலும் தூர்வாரப்படாததாலும், கரை பலப்படுத்தப்படாததாலும், ஒவ்வொரு வருடமும் வடகிழக்கு பருவமழையின் போது விவசாயிகளுக்கு நஷ்டத்தை ஏற்படுத்தி வருகிறது. வடிகால் வாய்க்காலான நந்தியாறு, கூழையாறு ஆகியவற்றை தூர்வாரி கரையை பலப்படுத்த வேண்டும். இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

லால்குடி வட்டம் செங்கரையூர் கொள்ளிடம் ஆற்றில் தனியார் நிறுவனமான டயர் கம்பெனி ராட்சத குழாய் அமைத்து தண்ணீர் உறிஞ்சி வருகிறது. இதனால் லால்குடி வட்டாரத்தில் 5 ஆயிரம் ஏக்கர் விவசாயம் பாதிக்கப்படுகின்றன. அதை உடனடியாக தடை செய்ய வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## ஐஓபி சார்பில் புலிவலம் விவசாயிகளுக்கு ரூ.38.25 லட்சம் கடனுதவி

பதிவு செய்த நேரம்:2012-09-01 10:37:28

துறையூர்,: புலிவலத்தில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி சார்பில் விவசாயிகளுக்கு ரூ.38.25 லட்சம் பல்வேறு கடனுதவி வழங்கப்பட்டது.

புலிவலத்தில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி சார்பில் விவசாயிகளுக்கு கடன் வழங்கும் விழாவும், நிலுவை வாராக்கடன் வசூலும் நடைபெற்றது. வங்கியின் மண்டல முதன்மை மேலாளர் நாகேஷ் பட்டா தலைமை தாங்கினார். சிறப்பு விருந்தினர்களாக நபார்டு வங்கி மாவட்ட வளர்ச்சி மேலாளர் சுரேஷ்குமார், மாவட்ட மேலாளர் ராமதாஸ், மண்டல அலுவலக முதுநிலை மேலாளர் சுப்பிரமணியன், திருச்சி ஐஓபி மண்டல அலுவலக முதுநிலை மேலாளர் சுதாகர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விழாவில் கறவை மாடு, விவசாய கடன் அட்டை, நிலச்சீர்திருத்தம், சுயஉதவி குழுக்களுக்கு நேரடி

கடன் என ரூ.38.25 லட்சம் மதிப்பில் பல்வேறு கடன் உதவிகள் வழங்கப்பட்டது. வாராக்கடன் ரூ.1.5 லட்சம் வசூல் செய்யப்பட்டது. புலிவலம் ஐஓபி வங்கி முதுநிலை மேலாளர் அசோகன் வரவேற்றார். உதவி மேலாளர் மோகன் நன்றி கூறினார்.

## வேளாண் இணை இயக்குநர் கள ஆய்வு

பதிவு செய்த நேரம்:2012-09-01 10:49:03

பழநி,: பழநி அருகே அமரபூண்டி கிராமத்தில் வேளாண்துறையினரால் அமைக்கப்பட்ட நிலக்கடலை பயிரில் டி.எம்.வி. 13 ரக ஆதார நிலை விதைப்பண்ணையினை திண்டுக்கல் மாவட்ட வோளண்மை இணை இயக்குநர் சம்பத்குமார் கள ஆய்வு மேற்கொண்டார். பண்ணை அமைத்துள்ள விவசாயி துரைச்சாமியிடம் நிலக்கடலை டிஎம்வி 13 ரகத்தின் வளர்ச்சி மற்றும் பூச்சி, நோய் தாக்குதல் குறித்தும், அதன் சிறப்பம்சம் குறித்தும் கேட்டறிந்தார். பின், பழநி வேளாண்மை விரிவாக்க மையத்தில் பழநி வட்டார வேளாண்மை விரிவாக்க மைய பணியாளர்கள் மேற்கொண்டு வரும் திட்டப்பணிகளை ஆய்வு செய்தார். அனைத்து திட்ட இலக்குகளையும் விவசாயிகள் பங்குபெறச் செய்து முழுமையாக சாதனை அடைய அறிவுரை வழங்கினார்.

கள ஆய்வு மற்றும் பணியாளர்களின் பணிகள் ஆய்வின்போது திண்டுக்கல் மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் (மத்திய திட்டம்) கிருஷ்ணமூர்த்தி மற்றும் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் வெள்ளைச்சாமி உடனிருந்தனர்.

## 34 விவசாயிகளுக்கு கோழிப்பண்ணை அமைக்க ரூ.39 லட்சம் கடன் உதவி

பதிவு செய்த நேரம்:2012-09-01 10:48:32

திண்டுக்கல்,: திண்டுக்கல் மாவட்டத்தில் 34 விவசாயிகளுக்கு கால்நடை பராமரிப்புத்துறை மூலம் கோழிப்பண்ணை அமைக்க தலா ரூ.1.7 லட்சம் வீதம் ரூ.39.78 லட்சம் கடன் வழங்கப்பட உள்ளது என கலெக்டர் வெங்கடாசலம் கூறினார்.

திண்டுக்கல் கலெக்டர் அலுவலகத்தில் மாதாந்திர வங்கியாளர்கள் கூட்டம் கலெக்டர் வெங்கடாசலம் தலைமையில் நடந்தது. முன்னோடி வங்கி மேலாளர் அர்ஜுன் முத்தையா முன்னிலை வகித்தார். இதில் கலெக்டர் பேசியதாவது: மாவட்டத்தில் 34 விவசாயிகளுக்கு கால்நடை பராமரிப்புத்துறை மூலம் தலா ரூ.1.7 லட்சம் மதிப்பில் கோழிப்பண்ணை அமைக்க ரூ.39.78 லட்சம் கடன் வழங்கப்பட உள்ளது.

இந்த கடனில் 25 சதவீதம் மானியம். அதுபோல் தாட்கோ மூலம் தனிநபர் கடனாக ரூ.1.50 லட்சம்

வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. கடன் அதிகம் பெறும் மாவட்டமாக திண்டுக்கல் உள்ளது. சொட்டுநீர் பாசனத்திற்கு நபார்டு வங்கி பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. சொட்டுநீர்ப் பாசனக் கருவிகள் பராமரிப்பு, பழுதுநீக்குதல், கருத்தரங்கம், செயல்விளக்கக் கூட்டங்கள் நிலக்கோட்டை, கள்ளிமந்தயம், ஒட்டன்சத்திரம் ஆகிய 3 நீர்வடிகால் பகுதிகளில் நடத்தப்பட்டுள்ளது.

நபார்டு வங்கி மூலம் ரூ.50 கோடி மதிப்பில் கிராமிய கட்டுமானத்திட்டத்தின் கீழ் கிராமச்சாலைகள் அமைப்பதற்கும், அரசு பள்ளிக் கட்டிடங்கள் சுற்றுச்சுவர் கட்டுவதற்கும் நிதி வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு பேசினார்.

கூட்டத்தில் கனரா வங்கி மண்டலப் பொது மேலாளர் சம்பத்குமார், நபார்டு வங்கி பொது மேலாளர் சஞ்சீவி, உதவித்திட்ட அலுவலர்கள் திலகவதி, அன்பழகன், குமரவேல், சீத்தாராமன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## கடைமடை பகுதியில் கனமழை சம்பா நெல் நேரடி விதைப்பு விவசாயிகள் மகிழ்ச்சி

பதிவு செய்த நேரம்:2012-09-01 10:27:09

சேதுபாவாசத்திரம், : சேதுபாவாசத்திரம் கடை மடை பகுதிகளில் 8 மாதங்களுக்கு பின் கடந்த 2 தினங்களாக கனமழை பெய்ததால் சம்பா நெல் நேரடி விதைப்பில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். தஞ்சை மாவட்டம் சேதுபாவாசத்திரம் கடை மடை பகுதிகளில் 8 மாதங்களுக்கு பின் கடந்த 29, 30ம் தேதி கனமழை பெய்தது. நேற்றும் பரவலாக மழை பெய்தது. கடந்த பருவமழைக்கு பின் மழை இல்லாததால் நிலத்தடி நீர் மட்டம் 150 அடியை நெருங்கி குடிநீர் தட்டுப்பாடு நிலவும் நிலை இருந்தது.

மேலும் அதிக அளவில் சாகுபடி செய்து இருந்த தென்னை மரங்கள் தண்ணீரின்றி வாடியது. இந்நிலையில் இரண்டு தினங்களாக பெய்த கனமழையால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். மேட்டூர் அணை திறக்காமல் ஒருபோகம் சம்பா சாகுபடி கூட செய்ய முடி யுமா என்ற சந்தேகத்தில் இருந்த விவசாயிகள் இந்த மழையை பயன்படுத்தி பல் வேறு இடங்களில் நேரடி விதைப்பில் ஈடுபட்

டுள்ளனர்.

## பசுமை தரும் கிணற்றுப்பாசனம் அலங்காநல்லூர் பகுதிகளில் நெல் விவசாயம் அமோகம்

பதிவு செய்த நேரம்:2012-08-28 11:56:05

அலங்காநல்லூர், : கிணற்றுப் பாசனம் மூலம் அலங்காநல்லூர் மற்றும் சுற்றுப்பகுதிகளில் நெல் விவசாயம் அமோகமாக நடக்கிறது.

அலங்காநல்லூர் மற்றும் கொண்டையம்பட்டி, மேலச்சின்னனம்பட்டி, சின்ன இலந்தைகுளம், வயலூர்,தோடநேரி உள்ளிட்ட பகுதிகளில் நூற்றுக்கும் மேற்பட்ட ஏக்கர் பரப்பளவில் கிணற்று பாசனம் மூலம் நெல் விவசாயம் தற்போது நடைபெற்று வருகிறது. இதில் மகசூல் குறைவு. வறட்சி காரணமாக பெரியாறு பாசனப்பகுதிகளில் இன்னும் விவசாயம் துவங்கவில்லை. இதனால், நெல் விலை மூடை ஒன்றுக்கு (67 கிலோ) ஆயிரம் ரூபாய் முதல் ஆயிரத்து 500 ரூபாய் வரை தற்போது விற்பனையாகிறது.

இதேபோல் ஒரு ஏக்கர் நிலத்தில் பெறப்படும் வைக்கோல் ரூ.5 ஆயிரம் வரை விற்பனையாகிறது.

அதிக மகசூலுக்கு திருந்திய நெல் சாகுபடி சாதனை விவசாயி பெருமிதம் விவசாய களம்

பதிவு செய்த நேரம்:2012-08-28 11:56:11

தென்மேற்கு பருவ மழை பொய்த்துவிட்ட நிலையில் விவசாயிகள் வடகிழக்கு பருவ மழையை நம்பி உள்ளனர். இதன் மூலம் ஒரு போக சாகுடியாவது செய்ய வேண்டும். விவசாயிகள் குடும்பத்திற்காகவாவது உணவுக்கு தேவையான நெல் சாகுபடி செய்ய விவசாயிகள் முனைப்புடன் உள்ளனர். தற்போது ஆங்காங்கே மழை பெய்து வருகிறது. இந்த காலகட்டத்தில் திருந்திய நெல் சாகுபடி செய்து அதிக மகசூல் பெறுவது குறித்து குலமங்கலம் விவசாயி கிருஷ்ணன் கூறுகையில்: மக்கிய தொழு உரம்மிட்டு நிலத்தை தயார் செய்து வைத்திருக்க வேண்டும். ஒரு ஏக்கருக்கு 8 கிலோ விதையை ஊறவைத்து மண் பரப்பிய பிளாஸ்டிக் (ட்ரே)தட்டில் விதை பரப்பும் கருவி கொண்டு விதையை பரப்பி ட்ரேயை ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கி வைக்கவும். 36 மணி நேரத்திற்கு பின் சமப்படுத்திய நாற்றங்காலில் விதையை பரப்பி வைக்க வேண்டும். தேவைக்கு ஏற்ப தண்ணீர் பாய்ச்சி வரவேண்டும். 14ம் நாள் இளநாற்றை நடவு இயந்திரத்தின் மூலம் 25க்கு 25 செ.மீ இடைவெளி விட்டு நடவு செய்ய வேண்டும். நடவுக்கு பின் 10 நாள் கழித்து சோனோ வீடர்(எ) பவர் வீடர் மூலம் களைகளை அமுக்கி விடவேண்டும். இதேபோன்று 20, 30, 40 நாட்களில் களை எடுக்க வேண்டும்.

உரம் நீர் நிர்வாகம்: நடவுக்கு 17:17:17 காம்ப்ளக்ஸ் இரண்டு மூடை இட வேண்டும். 20 மற்றும் 35ம் நாட்களில் இலை வண்ண அட்டை பயன்படுத்தி யூரியா, பொட்டாஷ் உரங்களை தேவைக்கு ஏற்ப இட வேண்டும். நீர் மறைய நீர் கட்டி பயிருக்கு தண்ணீர் பாய்ச்சுவதால் நீரின் அளவு மொத்தத்தில் 40 சதவீதம் மிச்சமாகிறது.

பயன்கள்: களைகளை நிலத்திலே அமுக்குவதால் பயிருக்கு உரமாகிறது. பயிர்கள் இடைவெளியிருப்பதால் சூரிய ஒளி அனைத்து தூர்களுக்கும் கிடைக்கிறது. தூர்களின் எண்ணிக்கை 35ம் நாள் 30 சிம்புகளும், 50 நாள் 60 சிம்புகளும் கிடைத்தது. நல்ல இடைவெளி இருப்பதால் பூச்சி, பூஞ்சாணம் தாக்குதல் குறையும். உரச்செலவும் பதர் குறைந்து மகசூல்

இரட்டிப்பாக கிடைத்தது. கூலி ஆட்கள் கிடைக்காத இத்தருணத்தில் திருந்திய நெல் சாகுபடி செய்வதால் நிம்மதி கிடைக்கிறது. கால விரையம் தவிர்க்கப்படுகிறது. இது குறித்து அவர் மேலும் கூறுகையில்: நான் கடந்த 3 ஆண்டுகளாக இயந்திரம் மூலம் திருந்திய நெல் சாகுபடி செய்து ஏக்கருக்கு சுமார் 4 ஆயிரம் கிலோ மகசூல் எடுத்துள்ளேன். இந்த சாகுபடியால் மாவட்ட அளவில் சிறந்த விவசாயிக்கான விருதை கலெக்டர் சகாயத்திடம் பெற்றுள்ளேன். தேசிய அளவில் மகேந்திரா சம்மிந்தி அக்ரி விருதுக்கான போட்டியில் கலந்து கொண்டு இந்தாண்டு பிப்.20ம் தேதி டெல்லியில் நடந்த விழாவில் மத்திய வேளாண்மை அமைச்சர் சரத்பவாரிடம் முதல் பரிசாக ரூ.2.11 லட்சமும், சான்றிதழும் பெற்றுள்ளோன். இது தமிழ் மண்ணுக்கு பெருமையாகும், என்றார்.

-இரா.சக்திவேல்.

## தொடர்மழையால் குண்டாறு அணை நிரம்பியது விவசாய பணிகள் தீவிரம்

பதிவு செய்த நேரம்:2012-09-01 10:02:30

நெல்லை,: செங் கோட்டை பகுதியில் பெய்த தொடர் மழையால் குண்டாறு அணை நிரம்பி வழிகிறது. இதனால் விவசாயப்பணிகள் தீவிரமடைந்துள்ளன. செங்கோட்டை பகுதி யில் தென்மேற்கு பருவ மழை பெய்யாததால் கடும் வறட்சி நிலவி வந்தது. விவசாய பணிகள் மேற்கொள்ளப்படாமல் நிலங்கள் தரிசாக கிடந்தன. இந்நிலையில் நேற்று முன்தினம் காலை முதல் இரவு வரை விட்டு விட்டு தொடர்ந்து மழை பெய்தது. நேற்றும் மழை நீடித்தது. இதனால் 36 அடி கொள் ளளவு கொண்ட குண்டாறு அணை நிரம்பி வழிகிறது. அணைப்பகுதியில் 20 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது. அணையிலிருந்து விநாடிக்கு 10 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. இதேபோல் அடவிநயினார் அணையிலும் தண்ணீர் அதிகரித்து வரு கிறது. 132 அடி கொள்ளளவு கொண்ட அடவிநயினார் அணையில் நீர்மட்டம் 55 அடியை எட்டியுள்ளது. அணைக்கு 17 கனஅடி தண்ணீர் வருகிறது. அணையிலிருந்து விவசாயப்பணிகளுக்காக 4 கன அடித்தண் ணீர் திறந்து விடப்படுகிறது.தொடர் மழையால் குண்டாறு அணையை யொட்டி உள்ள அபிஷேகப்பேரி குளம் நிரம்பி மறுகால் பாய்கிறது. மேலும் தஞ்சாவூர் குளம், நிறை குளம் ஆகியவையும் நிரம் பும் தருவாயில் உள்ளன. அபிஷேகப்பேரி குளத்துக்குபட்ட பாசன பகுதியில் 14 ஏக்கரில் விவ சாய பணிகள் தீவிரமாக நடந்து வருகின்றன. தற்போது விவசாயிகள் நெல் நாற்று நடும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.